ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2493/19 - 2026 ජූනි මස 17 වැනි බදාදා - 2026.06.17

2493/19 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.24/1951 (XIV)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 157அ 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்
நகர அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
2026. யூன் 15,

**ஒழுங்குவிதிகள்**

2018, சனவரி 15 ஆந் திகதிய 2054/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி, 2025, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2455/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2026, மார்ச் 19 ஆந் திகதிய 2480/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2011, ஓகத்து 03 ஆந் திகதிய 1717/14 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மோட்டார் வாகன (கடுகதிப் பாதை) ஒழுங்குவிதிகள், அதன் 8ஈஅ என்னும் ஒழுங்குவிதியினை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதியினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-

"8ஈஆ. ஒழுங்குவிதி 8ஈ இன் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளில் எதுஎவ்வாறிருப்பினும், கீழே (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற மோட்டார் வாகனங்களின் பின்வரும்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வகுப்புக்களில் பயணிக்கின்ற (சாரதி தவிர்ந்தவரும் மற்றும் முன் ஆசனத்தில் அல்லது சாரதி ஆசனத்துக்கு அண்மையிலுள்ள ஆசனங்களில் அமர்ந்துள்ள பயணி) ஒவ்வொரு பயணி மற்றும் தனியாள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவற்றின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையானது, 2026, யூன் 20 ஆந் திகதியிலிருந்து தொடங்கி 2026, செத்தெம்பர் 19 ஆந் திகதி முடிவடையும் காலப்பகுதியினுள் இல்லாதொழிதல் வேண்டும்:-

(அ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனத்திற்கும் பல்வேறு பின்புற ஆசனங்களிற்கும் 8உ என்னும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்பட்டிருக்காத கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் மோட்டார் காரொன்று;

(ஆ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனங்களுக்கு அல்லது பல்வேறு பின்புற ஆசனங்களுக்கு ஒழுங்குவிதி 8உ இல் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்பட்டிருக்காத கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் இலகுரக மோட்டார் வண்டி, மோட்டார் வண்டி, கனரக மோட்டார் வண்டி, இரட்டை நோக்க வாகனம், இலகுரக மோட்டார் லொறி, கனரக மோட்டார் லொறி அல்லது மோட்டார் மனை வாகனமொன்று;

(இ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பன நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனங்களுக்கு அல்லது பல்வேறு பின்புறஆசனங்களுக்கு ஒழுங்குவிதி 8உ இல் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்பட்டிருக்காத கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் நாளாந்த அலுவலகப் போக்குவரத்துச் சேவையில் அல்லது பாடசாலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இரட்டை நோக்க வாகனம், இலகுரக மோட்டார் வண்டி, மோட்டார் வண்டி அல்லது கனரக மோட்டார் வண்டியொன்று.".

ECG 06 - 0198

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது